விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 151 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 05 சனிக்கிழமை (18.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழினப் படுகொலை நாளான




# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று



## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தலுக்கு ஏற்பாடு

(முல்லைத்தீவு)

தமிழினப் படுகொலை நாளான மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். முள்ளிவாய்க்கால் முற்றத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.

(04ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போனோர் தொடர்பில் அரசு பொறுப்புக்கூற வேண்டும்

### ஐ.நா வலியுறுத்து

(கொழும்பு)

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அர்த்த பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதற்குக் காரணமானவர்கள் அனைவரையும் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களை ஒருபோதும் மறக்கக் கூடாது என்பதனை இந்த அறிக்கை 15

## முன்னாள் போராளிகளை சந்தித்த அமெரிக்கத் தூதுவர்



15

## கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

(கொழும்பு)

தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும்நிலையில், இன்று கொழும்பிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி, இன்று காலை வெள்ளவத்தை தொடருந்து நிலையத்துக்கு அருகில் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் பேரவை எனும் அமைப்பால், நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ள 15

## நினைவேந்தலுக்கு யாரும் தடைவிதிக்க இயலாது

### யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தாயொருவர் குமுறல்

(முல்லைத்தீவு)

2009ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையில் கொன்றொழிக்கப்பட்டவர்களுக்கான நினைவுகூரலுக்கு யாராலும் தடை விதிக்க இயலாது என பாதிக்கப்பட்ட தாயொருவர் தெரிவித்துள்ளார். 15

## 14 இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையால் கைது

(கொழும்பு)

இந்திய கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த 14 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினம் - கோடியக்கரைப் 15

## நினைவேந்தலை தடுக்க வேண்டாம் தமிழ் மக்களின் மனதை மேலும் புண்படுத்தாதீர்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபடும் தமிழ் மக்களைக் கைது செய்து அவர்களின் மனதை மேலும் புண்படுத்த வேண்டாம் என்று அரசிடம் கோரியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. 04

## ஏழாலை கிழக்கில் கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கிழக்குப் பகுதியில் கிணற்றிலிருந்து ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் ஏழாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஐயாத்துரை தியாகராஜா (வயது-76) என்ற 15

## மரத்திலிருந்து தவறிவிழுந்த இளைஞன் உயிரிழப்பு

### உடுவிலில் சம்பவம்

(மானிப்பாய்)

உடுவில் பகுதியில் மரத்திலிருந்து தவறிவிழுந்த இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் ஆலடி உடுவில் மானிப்பாயைச் சேர்ந்த சசிக்குமார் ரூபின்சன் என்ற 20 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கடந்த 12ஆம் திகதி மாங்கனிகளை பறிப்பதற்காக மாமரமொன்றில் ஏறிய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE WORLD

கணித விஞ்ஞானப் பிரிவுகள்

## A/L 2026 Batch

**Tamil & English Medium**

நேரடி வகுப்புக்கள் மற்றும் **Zoom** ஊடான வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல் | : திரு.R.குமரன்<br>திரு.R.குகன் |
| இரசாயனவியல் | : திரு. டயஸ்<br>திரு.K.T.சிவகுமார் |
| உயிரியல் | : திரு.N.T.கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | : திரு.S.S.செந்தில்ராஜ்<br>திரு.V.ஹரிகரன் |
| ICT | : திரு.T.லவேந்திரன் |

**ஆரம்பம் : 23.05.2024 (வியாழக்கிழமை) காலை 8.00 மணி**

அனுமதிகளை 19.05.2024(ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு

**077 336 4055, 021 221 6690**
**077 336 4030, 075 836 4055**

**NEW SCIENCE WORLD**
**Navalar Road, Brown Road Junction, Jaffna.**

(C-0391)

# தேவை

கிளிநொச்சியில் இயங்கும் எமது சிறுவர் இல்லங்களுக்கு கீழ் காணப்படும் வேலைகளுக்கு ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- ❑ **முகாமையாளர்** - ஆண்/ பெண்
  தகைமை : ஆகக்குறைந்தது A/L 3 பாடங்களில் சித்தி
  வயது : 30 - 55
- ❑ **பராமரிப்பாளர்** - ஆண் /பெண்
  தகைமை - ஆகக்குறைந்தது O/L சித்தி
  வயது : 25 - 55
- ❑ **சமையலாளர்**
  வயது : 25 - 55

**தலைவர்**
**செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையம்**

(781)

**தொடர்புக்கு: 071 535 4500**

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127**

## கட்டடப் பொருட்கள் விநியோகம்

1.மணல் வகை - கட்டு மணல், பூச்சு மணல் (கண்டாவளை பெருக்கன் நைஸ்)
2.சல்லி வகை - கருங்கல் சல்லி, வெள்ளை சல்லி
3.கண்டல் வகை - 9" X 6" கருங்கல் , 9" X 6" வெள்ளைக்கல்(காட்டுக்கல்)
4.டஸ்ட் - கருங்கல் டஸ்ட், வெள்ளைக் கல் டஸ்ட்
5.கலவன் டஸ்ட்
6.தளம் மற்றும் நில பதிவுக் கல்
7.கூரை ஓடு வகைகள்

கொங்கிறீற் கல், கொங்கிறீற் வேலி, தூண் ஆகியவை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கட்டட வேலைகளும் செய்துதரப்படும்.

(641)

**தொடர்புகளுக்கு : 077 666 7684 / 076 096 4460**

## கோழிகள், முட்டைகள் மலிவு விலையில்

**நியூ சிற்றி கோழிக்கடை யாழ்ப்பாணத்தில் 34 வருட பூர்த்தியை முன்னிட்டு கோழிகள், முட்டைகள் மலிவு விலையில்**

- இலங்கையின் No 1 சிக்கன் விற்பனையாளர்
- வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் (18/05/2024) இன்று காலை 8.30 மணிக்கு அடுத்த கிளை திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தி அருகாமையில் இராமநாதன் வீதியில் நியூ சிற்றி கோழிக் கடை திறக்கப்படுகின்றது.
- வாடிக்கையாளர் நலன் கருதி 24 மணி நேர சேவை
- புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க்கோழி முட்டைகள்
- மொத்த கொள்முதல் ரான்ஸ்போட் இலவசம்
- எமது தலைமை காரியாலயம் இல.8, குருநகர் மாக்கற் முன்பாக யாழ்ப்பாணம்.

(793)

**021 430 3354, 076 359 3354**

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள் — முதலாம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
திரு. பரமாந்தர் கந்தையா ஆறுமுகம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தவப்பேறு 02.11.1935 — சிவப்பேறு 20.02.2021
திதி : பூர்வபக்க நவமி

அமரர்
திருமதி இரத்தினம் ஆறுமுகம்

தவப்பேறு 20.12.1948 — சிவப்பேறு 30.05.2023
திதி : பூர்வபக்க ஏகாதசி

தந்தையாய் தாயாய்
எங்களை செதுக்கிய சிற்பிகளே எப்படி
உங்களை நாம் மறப்பது
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மறந்திடுமா உங்கள் நினைவுகள்
வேண்டுதல் செய்கின்றோம் இன்று
உங்கள் ஆத்ம சாந்திக்காய் நாம்
மீண்டும் இங்கு பிறந்துவர மாட்டீரா
நீங்கள் காட்டிய வழியில்
உங்கள் நினைவுகள் சுமந்தபடி
எங்கள் பயணம்......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருநாவலூர் (C-0390) நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்

## பத்திரிநாத் கேதாரநாத் யாத்திரை இமயமலைப் பயணம்

| நாட்கள் | ஆரம்பம் |
|---|---|
| 12 | 15.06.2024 |

சென்னை, டெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஸ், பார்கோட், யமுனோத்திரி, யமுனா ஆற்றின் முதல் இடம் கங்கோத்திரி கங்கை உற்பத்தியாகுமிடம், கங்கா நதி வென்னீர் ஊற்றுக்கள், உத்திரகாசி விநாயகர் தலை கொய்த இடம், குப்தகாசி பாண்டவர் வழிபட்ட சிவன் கோவில் ஸ்ரீ நகர், பத்திரிநாத் திவ்ய தேசம், கேதார் ஜோதி லிங்கம் ஆதி சங்கரர் ஜீவசமாதி, தேவப்பிரயாகை, ஜோசி மடம் நரசிம்மசுவாமி, திவ்யதேசம், மானூசரஸ்வதி நதி தோற்றுமிடம், இந்தியா - சீனா எல்லை மற்றும் பல இடங்களில் தரிசனம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை: இருவழி விமானக் கட்டணம், யாத்திரை முழுவதும் AC பஸ், உடன் சமைத்த சூடான சுவையான மூன்று வேளை உணவு, இரண்டு பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், உட்பட சென்னையில் ஒரு நாள் சொப்பிங்.

(769)

**ஸ்ரீரங்கநாதன் 077 768 0102**
**ராஜன் 077 736 2154**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின அழிப்புக்கு நீதி கோரி புலம்பெயர் நாடுகளில் கவனயீர்ப்பு

## முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைப்பு





(பாரிஸ்)

மே.18 தமிழின அழிப்புக்கு நீதிகோரி பிரான்ஸ், டென்மார்க் நாடுகளில் கடந்த புதன்கிழமை கவனயீர்ப்பு நினைவேந்தல் நிகழ்வு மற்றும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழ்ச் சங்கங்களின் ஏற்பாட்டின் பிரான்ஸில் திரான்சி, வில்நெவ் ஆகிய இரு இடங்களில் மே 18 தமிழின அழிப்புக்கு நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பொதுச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளதுடன் நிறைவில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது வில்நெவ் தமிழ்ச் சோலை மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். அதேவேளை "எத்தனை துயர்வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்" எனும் தொனிப் பொருளில் டென்மார்க் தலைநகர் சோபன் ஹேனன் நகர சபை சதுக்கத்தில் தமிழின அழிப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தாயகத்தில் எம் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியை பறைசாற்றும் விதத்தில் பதாதைகள், விவரணப் படங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பரப்புரைகளை முன்னெடுத்து இருந்தனர்.

டென்மார்க் தலைநகரில் நீதிகளின் எழுச்சிப் பேரணி ஒன்று இன்று இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சிறிலங்காவின் நீதிக்கட்டமைப்பு உட்பட அனைத்துப் பொறிமுறைகளும் நம்பகமற்றவை

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

**(யாழ்ப்பாணம்)**

**முள்ளிவாய்க்காலில் கஞ்சி பரிமாறும் செயலென்பது தமிழ் மக்களிடையே முன்னரை விட எழுச்சியோடு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சிறிலங்கா அரசு அதனைத் தடுப்பதனூடாக தனது ஆக்கிரமிப்பை சாதித்து விட முனைகின்றது என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.**

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் கேள்விக்குள்ளாகும் நினைவு கூரும் உரிமை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமிழ் மக்களின் வலிகள் கூறும் நினைவுத் தூபிகளை அழித்தல் மற்றும் தமது போர் வெற்றிச் சின்னங்களை நிறுவுவதன் ஊடாக தமிழ் மக்களின் நினைவுகளை அழிப்பதில் பெரிதாக எதையும் சாதித்திராத சிறிலங்கா அரசு, முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயலென்பது தமிழ் மக்களிடையே முன்னரை விட எழுச்சியோடு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனைத் தடுப்பதனூடாக தனது ஆக்கிரமிப்பை சாதித்து விட முனைகின்றது.

தமது உறவுகளை அஞ்சலிக்கும் நிகழ்வாக முன்னெடுக்கப்படும் "முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை" நினைவேந்தல்கள் வடக்கு - கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பெங்கும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சிறிலங்கா காவல் துறை, இராணுவம் உள்ளிட்ட படைத் தரப்புக்களினால் நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்டு நினைவு கூரும் உரிமைகள் மறுக்கப்படும் வன்செயல்கள் அரங்கேறி வருகின்றமையை மாணவர் சமூகமாக கூர்ந்து நோக்குகின்றோம்.

இதுபோன்ற நினைவு கூறும் உரிமைகளை தடுக்கும் செயற்பாடுகள் பெயரளவிலாவது கூறப்படும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவதோடு சிறிலங்காவின் நீதிக்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து வித உள்ளகப் பொறிமுறைகளும் நம்பக மற்றவை என்பதனை தொடர்ந்தும் நிரூபிக்கின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-33)

# முள்ளிவாய்க்காலுக்கு விசேட பேருந்து சேவை

(கிளிநொச்சி)

தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்விற்கான முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்கு கிளிநொச்சியிலிருந்து விசேட பேருந்து சேவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒழுங்கமைப்பில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்கு நினைவேந்தல் நிகழ்விற்கு செல்லும் பொதுமக்களின் நலன் கருதி இன்று காலை 7.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலிருந்து குறித்த பேருந்து சேவை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி.

**பொன்அரசி குணசேகரன்(பிரதி அதிபர்)**

(SLTS-I), B.A, Dip in Edu.

Best Wishes

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/ ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை | - 1990.03.09-1993.06.30 |
| யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை | -1993.07.01-2010.05.09 |
| யா/தேவரையாளி இந்துக் கல்லூரி | - 2010.05.10-2024.05.17 |

எமது பாடசாலையில் பதினான்கு வருடங்கள் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக கடமையாற்றி 17.05.2024 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதி அதிபர் அவர்களது ஓய்வுக் காலம் சிறக்கவும் நீடூழி காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

Happy Birthday 2024.05.18

பணியாளர் நலன்புரிச்சங்கம்,
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி - கரவெட்டி. (783)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின்...

திருகோணமலை, மூதூர் - சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய மைக்காக நால்வர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே மைத்திரிபால மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

"இலங்கையில் இடம்பெற்ற போரில் உயிரிழந்தவர்களை நினைவேந்தி அஞ்சலிக்க அவர்களின் உறவுகளுக்கு முழு உரித்து உண்டு. அதை இன ரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ அவர் பிரித்துப் பார்க்க முடியாது.

எனவே, இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களை அவர்களின் உறவுகள் நினைவேந்த அரசு அனுமதிக்க வேண்டும். அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடி எந்தத் தடை உத்தரவுகளையும் அரசு விதிக்கக் கூடாது.

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபடும் தமிழ்மக்களைக் கைது செய்து அவர்களின் மனதை மேலும் புண்படுத்த வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ம-7,10)

## முள்ளிவாய்க்...

தமிழின அழிப்பான முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மிகவும் அமைதியான முறையில் இன்றைய தினம் சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் இடம்பெறும் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு அறிவித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் இக்காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் இன அழிப்பு தினம் வருடா வருடம் இலங்கை மற்றும் புலம்பெயர் மக்கள் வாழும் பிர தேசங்களிலும் அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று முற்பகல் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மிகவும் அமைதியான முறையில் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அனைத்துப் பொதுமக்களும் கலந்து கொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த முடியும். அஞ்சலி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. (ம-7,10)

## லக்னோ ஆறுதல் வெற்றி

துடுப்பாட்டம் பந்துவீச்சில் அசத்திய லக்னோ அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது.

மும்பை, வான்கடே மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் மும்பை, லக்னோ அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணியின் தலைவர் ஹர்திக் பாண்ட்யா களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

லக்னோ அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 214 ரன் எடுத்தது. துடுப்பாட்டத்தில் பூரன் 75, ராகுல் 55 ஓட்டங்களை எடுத்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 6 விக் கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்கள் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரோகித்68, நமன்திர ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களை எடுத்தனர்.


**வேலையாட்கள் தேவை**

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO)
HND, NTC -Civil/Qs NVQ Level 5
Experience with preparing Bill.
தொடர்பு:
**077 210 0749**
Mail : bestbuilders1983@hotmail.com
(காலை 8.00 - மாலை 5.00 வரை)
யாழ்ப்பாணம் (789)

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள் பிரிவு 53**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT / AI
- Diploma in Psychology & Counceling
- Diploma in Leadership & Business Management
- Diploma in Political Science

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25, 26.05.2024 - 10 AM
◈ காலம் : 03 மாதங்கள் ◈ சான்றிதழ் பிரிவுகள்
IPS To your Future
Thirunelvely
T.P: 074 234 9120 (795)

**லங்கா மஹால் பிறைவேட் லிமிட்டட்**
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)
**வேலையாள் தேவை (ஆண்,பெண்)**
A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
65, 2nd cross street, Vavuniya.
**077 839 3974**
(799)

**வீடு / அறை வாடகைக்கு**

யாழ்.நகரில் இருந்து குறுகிய பயணத் தூரத்தில் சுதுமலையில் வீட்டில் அறைகள் வாடகைக்குண்டு.
படிக்கும் / வேலை செய்யும் ஆண்கள் /பெண்கள் விரும்பப்படும். (790)
**076 789 6016**

**வேலையாட்கள் தேவை**

| | |
|---|---|
| மேசன் | - Rs.2500.00 - 3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs.2000.00 - 2500.00 |
| பெயின்ரர் உதவியாளர் | - Rs.2000.00 |
| வெல்டர் உதவியாளர் | - Rs.2000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | -Rs.2500.00 - 3000.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்)
தொடர்பு: **077 210 0749** (789)
(காலை 7.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்

**புதிய காவலனின் விவாகப் பொருத்துனர் அல்வாய், கோப்பாய் சேவை நிலையங்களில் மணமகள் தேவை என்று பதிவுகள் வந்துள்ளன.**

1. 06.03.1995 இல் பரணி நட்சத்திரத்தில் பிறந்த B.Sc குவாண்டிட்டி சேவையர் மொறட்டுவ மணமகனுக்கு மணமகள் தேவை. மூன்று சுற்று பாவம். 80½ லக்கின பாவம் 56
2. 07.04.1996 விசாகம் 4ஆம் பாதம் உதயத்தில் சனியன், செவ்வாய் சேர்ந்திருக்கும் B.Sc கொம்பியூட்டர் இன்ஜினியர் மணமகனுக்கு உயர்கல்வி அல்லது டிப்ளோமா முடித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
3. 27.02.1990 உத்திரட்டாதி 4ம் பாதம் 5 அடி 17 அங்குல உயரமுள்ள P.H.D சிவில் இன்ஜினியருக்கு உயர்கல்வி கற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். IT பட்டதாரி மணமகளுக்கு முன்னுரிமை. பெண் அழகானவளாக இருத்தல் முக்கியம். கொழும்பு யுனிவேசிற்றியில் படித்த டொக்டர் பெண்ணும் பார்க்கலாம்.
4. 26.03.1995இல் பரணி நட்சத்திரத்தில் பிறந்த B.Sc சிவில் இன்ஜினியர் சிங்கப்பூரில் வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் பட்டதாரி, டிப்ளோமா, IT பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறார்கள். பெண் மெல்லிய வெள்ளை நிற அழகானவளாக இருத்தல் வேண்டும்.
5. 25.04.1996 புனர்பூச நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்த அவுஸ்திரேலிய எலக்ரிக்கல் என்ஜினியருக்கு உதயத்தில் 12இல் 4இல் சனியன் செவ்வாய் உள்ளது. உயர்கல்வி படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். (உதயத்தில் சனியன், செவ்வாய் உண்டு)
6. 11.12.1994 பூரட்டாதி 1ம் பாதத்தில் பிறந்த எலக்ரிக்கல் என்ஜினியர் அழகான மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். மரபு வழி திருமணங்கள் விரும்பத்தக்கது. மணமகள் உயர்கல்வி டிப்ளோமா கற்கைநெறி படித்ததாக இருக்க வேண்டும்.

தொடர்பு - **புதிய காவலன் விவாகப் பொருத்துனர்**
**077 663 0273** (C-0395)


**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில் 20.05.1944 விண்ணில் 18.05.2020

**அமரர் கந்தையா சிவபாதம்**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் – ஆசிரியர் கலாசாலை, பலாலி)

நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாலும்
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன்
கண்களில் இருப்பீர் கண்ணீராக...

தகவல்: குடும்பத்தினர் (0070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே-18 தமிழினத்திற்கு கரிநாள்



ஒரு இனத்தின் உணர்வெழுச்சியை சட்டத்தினூடே தடைபோட்டுக்கட்டுப் படுத்துவதென்பது அந்த இனத்தின் ஆகக் குறைந்த உரிமையான நினைவேந்தும் உரிமையைக்கூட தட்டிப்பறிக்கும் செயல்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினம் பட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல. அந்த இன்னல்களை இனியொரு இனம் அனுபவிக் கப் போவதுமில்லை.

தமிழினமாய்ப் பிறந்த ஒரே ஒரு காரணத் திற்காக எமது இனம் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்துவிட்டது.

அதன் பாதிப்புகள்- விளைவுகள் இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. போரின்கொடும் தாக்கத்தின் அதிர்வுகள் இன்றுவரை திடீர் இறப்புக்களாய் பதிவு செய்த வண்ணமே உள்ளன.

ஆயினும் சிறுபான்மைத் தமிழினம் சார்ந்த சிந்தனைகள் இலங்கை ஆட்சியாளர்களிடமும் சரி, சர்வதேசத்திடமும்சரி இல்லை என்பது தான் உண்மை.

சிறுபான்மைத் தமிழினத்திற்கான சுதந்திர த்தை வழங்கியே ஆக வேண்டும் என இல ங்கை அரசுகளோ, சர்வதேசமோ நினைத் திருந்தால் அடுத்த கணமே அதை நிறைவேற்றி இருக்கலாம்.

ஆனால் அதுதான் நடந்தாகவில்லை.மாறாக தமிழர் பூர்வீக பூமி தொடர்ந்து கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இறந்த தனது உறவுகளை நினைக்கக் கூடாது, அவர்களை ஒன்று கூடி நினைவேந்தக் கூடாது, முள்ளிவாய்க்காலில் மக்கள் உயிர் காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கக் கூடாது என தடை போடுவதற்குள் இருக்கும் இனப் பாகுபாட்டை எவ்வாறு விபரிக்க முடியும்.

முள்ளிவாய்க்கால் வாரத்தில் யாழ்.நகரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்திப் பவனி வந்து கொண்டிருந்தது.

கூடவே எம்மினத்தின் உயிர்காத்த முள்ளிவாய்க்கால் கஞ்சி பொது மக்களுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது.

என் இனத்தின் வலியை உப்பின்றிய அந்தக் கஞ்சியை குடித்து- உணர்ந்து மனதுக்குள் குமுறிக் கொண்டிருந்தேன்.

க.பொ.த சாதாரணதர பரீட்சை எழுதிய மாணவன் ஒருவன் துவிச்சக்கரவண்டியில் தனது நண்பர்களுடன் வருகிறான்.

அதில் ஒருவன் கஞ்சி குடிப்பமடா? என்றான்.சிரட்டையை சிரித்தபடி எடுத்த அந்த மாணவன் கஞ்சியை வாங்கி ஒரு முரடு குடித்தவன் முகத்தைச் சுழித்துக் கொண்டான்.

ச்சி... மாடு, ஆடு கூட குடிக்க முடியாத இந்தக் கஞ்சியை மனிதன் குடிப்பானா? என்றபடி கஞ்சியை ஊற்ற முற்பட்டான்.

நான், மெதுவாக... தம்பி கஞ்சியை ஊத்தாதையும்... இங்க வாரும்... என்றேன். என்னருகே வந்தவன், என்ன அங்கிள் என்றான்.

ஏன் கஞ்சி பிடிக்கவில்லையா? என்றேன். உப்புச்சப்பில்லாத இதை மனிதன் குடிப்பானா அங்கிள்? என்றான்.பொறுமையாக அவனை என்னருகே அமர்த்தினேன்.

ஆடு, மாடு கூடக் குடிக்க முடியாத இந்தக் கஞ்சி ஒரு இனத்தின் உயிர்காப்பாய் இருந்தது உனக்குத் தெரியுமா? என்றேன். இல்லை என மௌனமாக தலை அசைத்தான்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளி வாய்க்காலில் இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் மாண்டு போனது உனக்குத் தெரியுமா? என்றேன்.

மீண்டும் மௌனமானான்.அவன் முதுகை லேசாகத் தடவியபடி... தம்பி அந்தச் சண்டைக்குள்ள சிக்கி உணவு, குடிக்கத் தண்ணி இல்லாமல் அல்லல் பட்ட அப்பாவிப் பொது மக்களின்ட உயிர்க்காப்பானாக இருந்தது; நீங்கள் ஆடு, மாடு கூடக் குடிக்காது என்ற கஞ்சிதான் தம்பி என்றேன்.அவன் கண்கள் சிவந்து போனது.

அங்கிள் நேரம் போகுது வகுப்பு முடிஞ்ச நேரத்திலை இருந்து அரைமணித்தியா லத்திற்குள்ள வீட்டில நிக்காட்டி அம்மா பயப்புடுவா என்றான் மெதுவாக.

ஒரு நிமிஷம் தம்பி! நீங்கள் வீட்டை போகாட்டி உங்கட அம்மா பதறிப் போய் விடுவாவோ? என்றேன்.ஆம் எனத் தலை அசைத்தான்.

இறுதி யுத்தத்தில் எத்தனையோ பேர் தாயை இழந்து, தந்தையை இழந்து, தாயையும் தந்தையையும் ஒரே நேரத்தில் இழந்து; ஏன், சொந்த பந்தங்களை ஒட்டு மொத்தமாய் இழந்து அனாதை இல்லங்களில் தவிக்கிறார் கள் தெரியுமா?

கொடும் போரில் உடல் அவையவங்களை இழந்து நடைபிணமாக வாழுற மக்கள் பற்றித் தெரியுமா?

போர் தந்த வடுக்களை இன்னும் மனதுள் சுமந்து இறுக்கமான வாழ்வில் சிக்குண்டு வாழும் மனிதர்களைப் பற்றித் தெரியுமா?

ஒருவேளை உணவுக்கு வழியின்றி எத்தனை பேர் இன்றும் வறுமையில் வாழ்ந்து கொண்டி ருக்கின்றார்கள் தெரியுமா? என்றேன், மென்மையாக.

கையில் வைத்திருந்த சிரட்டையில் இருந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை மடக்கு, மடக்கு என்று குடித்த அவன் என்னை உற்று நோக்கினான். அவனின் பார்வையின் கேள்வி எனக்குப் புரிந்தது. அவனின் தோளை மீண்டும் தடவியபடி கூறினேன்.

தமிழினம் தோற்றுப்போன இனமல்ல. சுயமிழந்த இனமல்ல, நாடு இல்லாத இன மல்ல துரதிஷ்டம் இன்று எதுவுமின்றி அநாதையாய் நிற்கின்றது.

எமது இனம் பட்ட பாட்டை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அனைத்தையும் இழந்து நிற்கும் எம்மிடம் நம்பிக்கை என்ற ஆயுதம் இப்போதும் இருக்கிறது.அதை வலுவாக்குவோம். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டுமென்றில்லை.

அதை எடுப்பதற்கு பல அறவழிகளு முண்டு.அதன் ஒரு வழிதான் கல்வி, அந்தக் கல்வி வழி உயர்ந்தால் எம்மினத்தின் இன்னல்கள் பறந்தோடும் என்றேன்.

தனது துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு சிட்டாகப் பறந்தான் அவன்.

ஏதோ ஒரு பெரிய சாதனை செய்த திருப்தி எனக்கு. என் மனது நிறைந்திருந்தது. முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது முள்ளிவாய்க்காலை நோக்கி...



அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் மீதான இணைய அச்சுறுத்தல் பலமடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இணையம் ஊடாக சிறார்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் பாரியளவில் அதிகரித்துள்ளதாக அதிர்ச்சிகரமான தகவல் ஒன்றை அமெரிக்க நிறுவனமான காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட சிறார்கள் தொடர்பான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம், இணையத்தில் நிர்வாண புகைப்படங்களைப் பயன்படுத்தி சிறார்களை அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் தொடர்பாக 55 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் 150 முறைப்பாடுகளும், இந்த வருடம் ஏப்ரல் 31 ஆம் திகதி வரை 55 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் துஷ்பிரயோகத்திற்காக சிறார்களை இணையத்தளங்களில் கோருவது பல மடங்கு அதிகரித்துள்ளது என அமெரிக்க நிறுவனமான காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட சிறார்கள் தொடர்பான தேசிய மையம் வெளிப்படுத்தியுள்ளது. (நி-6)

# 1083 கையடக்கத் தொலைபேசிகளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் "பென்ரைவ்" களுடன் இரண்டு வர்த்தகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கொழும்பு 12 மற்றும், கொழும்பு 14 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 59 மற்றும் 24 வயதுடைய இரண்டு வர்த்தகர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை 4.55 மணியளவில், டுபாயிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இருவரும் தங்களது பயணப்பொதிகளுடன் விமான நிலையத்தை விட்டு வெளியேற முற்படும் போது குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தகர்களிடம் இருந்து 1,083 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 200 உயர் கொள்ளளவு கொண்ட பென்டிரைவ்கள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 50 மில்லியன் ரூபா எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-6)

# பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் இடைநிறுத்தம்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள தொடர் வேலை நிறுத்தம் காரணமாக பல்கலைக்கழகங்களில் இளங்கலை பட்டதாரிகளின் அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 50,000 இற்கும் மேற்பட்ட இளங்கலை மாணவர்கள் திட்டமிட்ட நேரத்தில் பட்டப்படிப்பை முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

மேலும் வேலைநிறுத்தம் காரணமாக பட்டதாரி படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் விவரங்கள் அடங்கிய பல்கலைக்கழக சேர்க்கை கையேடு வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி சாரா ஊழியர்களின் ... பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான யோசனைகளை கல்வி அமைச்சர் ஏற்கனவே அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

எவ்வாறாயினும் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும் என பல்கலைக்கழக ஒன்றியத்தின் இணை அழைப்பாளர் தம்மிக்க எஸ்.பிரியந்த தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பு

## வைகோ கண்டனம்



(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்திய மத்திய அரசு தடைசெய்துள்ள நிலையில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தவறான நோக்கத்தோடு உண்மைக்கு மாறாக புலிகள் இயக்கம் மீதான தடை நீடிக்கப்பட்டுள்ளது. இது அநீதியான செயலாகும்.

இலங்கையில் நடைபெற்று வந்த போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த பிறகும், விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ தனி நாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை. அதற்கான ஆதரவு மற்றும் நிதித்திரட்டல் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது என்று தடை நீடிப்பு ஆணையில் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலையை சுட்டிக்காட்டித்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. அந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். ஒரு சிலர் மறைந்து விட்டார்கள்.

உண்மையான குற்றவாளிகளை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட பல்நோக்கு புலனாய்வுக் குழு 20 ஆண்டு காலமாக எவரையும் கைது செய்யாமல் காலம் கடத்தி இறுதியில் கலைக்கப்பட்டு விட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தவறான நோக்கத்தோடு உண்மைக்கு மாறாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தடையை நீடிப்பது என்பது அநீதியான செயலாகும்.

"இந்திய அரசின் இந்த செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்று வைகோ தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# மாணவர்களுக்கான காப்புறுதி திட்டம் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை



(கொழும்பு)

மாணவர்களுக்கு நன்மை பயக்கும் சுரக்ஷா காப்புறுதி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அடுத்த வாரம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க இருக்கும் பொருளாதார மேம்பாட்டு சட்ட மூலம் ஊடாக இதனை நடைமுறைப்படுத்த இருக்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், மாணவர்களின் நலன் கருதி 2017ஆம் ஆண்டு எமது அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சுரக்ஷா காப்புறுதி 2022 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டிருந்தது.

சுரக்ஷா காப்புறுதி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க இருக்கிறோம். பாடசாலை மாணவர்களின் சுகாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்காக இது பெரிதும் உதவியாக இருந்து வந்துள்ளது.

இந்தக் காப்புறுதியின் கீழ் அரச அல்லது தனியார் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக 3 இலட்சம் ரூபாய் வரையும் வெளிக்கள சிகிச்சைக்காக 20 ஆயிரம் ரூபா வரையும் மோசமான நோய் நிலைமைகளுக்காக 15 இலட்சம் ரூபாய் வரை நன்மை கிடைக்கிறது என அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போர் குற்றங்களுடன் தொடர்புடையவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அனுப்ப வேண்டும்

## பிரித்தானிய எதிர்க்கட்சி வலியுறுத்து

**(லண்டன்)**

**இலங்கை தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்களை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பதில் பிரித்தானிய அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென, பிரித்தானியாவின் எதிர்கட்சியான தொழிற்கட்சி வலியுறுத்தியுள்ளது.**



கட்சியின் தலைவரும், பெண்கள் மற்றும் சமத்துவத்துக்கான நிழல் மாநிலச் செயலாளருமான அமைச்சர் அன்னெலிஸ் டொட்ஸ் இதனை தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தின நிகழ்வை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இலங்கை போர் குற்றங்களுடன் தொடர்புடையவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போது தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை அவர், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், உயிர் பிழைத்தவர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் தனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைப் போரின் போது நடந்த கொடுமைகளை மறக்கக் கூடாது.

தமிழர்களுக்கு எதிரான சர்வதேச குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதி செய்வதன் மூலம், உயிர் நீத்தவர்களின் நினைவைப் போற்ற வேண்டும்.

அத்துடன் இலங்கையில் தமிழ் மக்களுக்கான நிரந்தர சமாதானம், நல்லிணக்கம் மற்றும் ஒரு விரிவான அரசியல் தீர்வு ஆகியவற்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும், முள்ளிவாய்க்கால் நினைவு நாளானது, போரின் கொடூரம் மற்றும் நீதியின் முக்கியத்துவத்தை நினைவூட்டுவதுடன், போர் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதிலும், அரசியல் தீர்வைக் கண்டறிவதில் மற்றும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தல் போன்றவற்றை கோடிட்டுக் காட்டுவதில் தொழிற்கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அமைச்சர் அன்னெலிஸ் டொட்ஸ் மேலும் தெரிவித்தார். (நி-6)

# யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நிழல் தரும் மரங்கள் நாட்டி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையின் முன்புறமாக உள்ள "மருத்துவமனை வீதியில்" நேற்று முன்தினம் மரநடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவமனை வீதியானது பொது மக்களின் அதிகரித்த பாவனையில் உள்ள சனநெரிசலான பகுதி. தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியின் ஊடாக நடந்தும் ஏனையோர் வாகனங்களினூடாகவும் பயணிக்கின்றனர்.

அப் பகுதியில் நிழல் தரும் மரங்கள் இன்மையால் நிலவும் வெப்பமான சூழ்நிலையில் நடைபாதையால் செல்லும் மக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது.

இந்நிலையில் யாழ்.போதனா மருத்துவமனை, யாழ்.மாநகர சபை, மற்றும் Green Layer சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்றாக இணைந்து மருத்துவமனை முன்புறமாக காணப்படுகின்ற வீதியின் நடுப் பகுதியில் நிழல் தரும் மரங்கள் நாட்டிவைக்கப்பட்டன. (நி-6-33)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# பிரித்தானியாவில் நகரமுதல்வராக இலங்கைத் தமிழர்

(லண்டன்)

பிரித்தானிய நகரம் ஒன்றின் புதிய முதல்வராக இலங்கையிலிருந்து ஏதிலியாக சென்ற தமிழர் பதவியேற்றுள்ளார்.

தொழில் கட்சியின் உறுப்பினரான இளங்கோ இளவழகன் என்பவரே இப்ஸ்விச் மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்ட நிலையில் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15. இராசாவின்தோட்டம் ஒழுங்கை, 5/8A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் தம்பிராசா மாணிக்கத்தின் உரிமையாளர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இவ்வாதனம் 1935 ஆம் ஆண்டு தை மாதம் 09 ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்ற பிரிவிடுதல் வழக்கு இலக்கம் P/936 இன் இறுதித் தீர்ப்பின்படி யோசேப் சுவக்கீன் கைம்பெண் பிலோமினாவுக்கு உரித்தாக வந்தடைந்தது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இல-5/8A, இராசாவின்தோட்டம் வீதியைச் சேர்ந்த யோசேப் சுவக்கீன் கைம்பெண் பிலோமினா 15.10.2018 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 4541 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் இல-46/2. மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சின்னத்தம்பி இராஜேந்திரனுக்கும் பெண் நளினிக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல 46/2, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சின்னத்தம்பி இராஜேந்திரனும் பெண் நளினியும் 23.01.2019 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 4731 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் இல-555/20, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த வீரகத்தி கோபாலசிங்கம் கைம்பெண் சுமதிக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி பறுகுகாடு இறை. பிரதேச செயலர் பிரிவு-யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் மாநகரசபை, கிராமசேவகர் பிரிவு J/78.

"பள்ளமடம்" யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற பிரிவிடுதல் வழக்கு இலக்கம்-P/936 இல் அணைக்கப்பட்ட நிலஅளவையாளர் V.சன்முகலிங்கம் தயாரித்த 11.06.1934 ஆம் திகதிய 2780 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் "1" எனும் இலக்கத்தால் சுட்டிக்காட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 1 (ஒன்று) குளி 11 2/5 (பதினொன்றுடன் ஐந்தில் இரண்டு)ம், வான்பயிர் செய்பயிர்களும். இதில் ஏற்கனவே கிழக்குப் பக்கமாக அறதிவிற்ற பகுதி போக மிகுதி நிலப்பரப்பு 1 (ஒன்று)ம், அதற்குச் சேர்ந்தவைகளும். இது பின்னர் உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.ஆறுமுகம் அவர்களால் 01.10.2018 இல் அளந்து தயாரித்த நில அளவைப் படத்தில் Lot 1. Lot 2 எனக்காட்டப்பட்ட துண்டுகளாகிய நிலப்பரப்பு 1 (ஒன்று)ம் அதற்குச்சேர்ந்தவைகளும்,

இந்த நிலப்பரப்பு 01 இற்கும் எல்லைகள்
கிழக்கு :- மோசஸ் செல்வம் பற்றிமா கலாவதியின் ஆதனம்.
வடக்கு :-யேசுதாஸ் சீலனின் ஆதனம்.
தெற்கு :- திரேசா அகஸ்தினினதும், றிச்சேட் ஜெகநாதனினதும் ஆதனம்.
மேற்கு :-சண்முகத்தின் ஆதனம்.

தற்போது வீரகத்தி கோபாலசிங்கம் கைம்பெண் சுமதி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வீரகத்தி கோபாலசிங்கம் கைம்பெண் சுமதி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

(சி-0387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் தாக்கி 11 பேர் உயிரிழப்பு

(டில்லி)

மேற்கு வங்க மாநிலத்தின், மால்டா மாவட்டத்தில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பகுதியில் பருவமழை தொடங்கியுள்ள நிலையிலேயே இவ் அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூன்று குழந்தைகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின்னல் தாக்கியதில் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# ரஃபா மீதான தாக்குதலை நிறுத்த சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்

## தென்னாபிரிக்கா வேண்டுகோள்

(தென்னாபிரிக்கா)

ரஃபா மீதான தாக்குதலை இஸ்ரேல் கைவிட வேண்டும் என சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என தென்னாபிரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

தென்னாபிரிக்க சட்டத்தரணிகள் எழுத்துமூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ரஃபா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஏழு மாத காசா யுத்தம் 35000 பேரை கொலை செய்துள்ளதுடன் காசாவை தரைமட்டமாக்கியுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

துயரம் என்பது மிக மோசமானதாக காணப்படுவதால் உணவு மருந்து போன்றவற்றை காசாவிற்குள் கொண்டு செல்வதற்கு யுத்தநிறுத்தம் அவசியமாகின்றது என தென்னாபிரிக்கா சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் தரைத்தாக்குதலை ரஃபா எதிர்கொண்டுள்ளது இது பாலஸ்தீனியர்களின் வாழ்க்கையின் அடித்தளத்தையே அழித்துவிடும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளார். (நி-6)

# இந்திய மசா

# புற்றுநோயை உண்டா

## ஆய்வை கடுமையா

(வோஷிங்டன்)

**இங்கிலாந்தின் உணவு கண்காணிப்பு அமைப்பு இருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் கூடுதல் கட்டுப்பாடு நடவ தொடங்குவதாக அறிவித்துள்ளது.**

இந்தியாவின் 2 பெரிய நிறுவனங்களுக்கு எதிரான பூச்சி கொல்லி குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு. அனைத்து இந்திய மசாலாப் பொருட்களையும் ஆய்வு செய்வது தொடர்பான உலகளாவிய கவலையை இங்கிலாந்தும் எதிரொலித்துள்ளது.

கடந்த மாதம் எம்டிஹெச் மற்றும் எவரெஸ்ட் என 2 இந்திய நிறுவனங்கள் தயாரித்த 3 மசாலா கலவைகளின் விற்பனையை ஹொங்காங் நிறுத்தியது. அவற்றில் புற்றுநோயை உண்டாக்கும் பூச்சிகொல்லியான எத்திலீன் ஒக்சைடு அதிக அளவில் இருப்பதாகத் தெரிவித்தது.

எவரெஸ்ட் தனது மசாலா இருப்பை திரும்பப் பெற சிங்கப்பூர் உத்தரவிட்டது. மேலும் நியூசிலாந்து. அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தியாவின் 2 பெரிய நிறுவனங்கள் தயாரித்த மசாலா தொடர்பான சிக்கல்களை ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தன.

இந்தியாவின் மிகவும் பிரபலமான 2 நிறுவனங்களான எம்டிஹெச் மற்றும் எவரெஸ்ட் ஆகியவை. தங்கள் தயாரிப்புகள் நுகர்வுக்கு பாதுகாப்பானவை

# சென்னையிலிருந்து இஸ்ரேலுக்கு வெடிபொருட்களுடன் சென்ற கப்பல்

## ஸ்பெயின் துறைமுகத்தில் நிறுத்த அந்நாட்டு அரச அனுமதி மறுப்பு

(ஸ்பெயின்)

சென்னையிலிருந்து 27 தொன் வெடிபொருட்களுடன் இஸ்ரேலுக்கு புறப்பட்ட சரக்குக் கப்பலை ஸ்பெயின் நாட்டின் துறைமுகத்தில் நிறுத்த அனுமதி மறுத்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.



கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது காசா பகுதியில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், பதிலடியாக இஸ்ரேல் கடந்த 9 மாதங்களுக்கும் மேலாக காசா மீது போர் நடத்தி வருகிறது. இதுவரை 35,000 இற்கும் மேற்பட்டோர் இந்தப் போரால் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 12,000இற்கும் மேற்பட்டோர் குழந்தைகள் என்பது உலக நாடுகள் இடையே பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இஸ்ரேல், காசா பகுதி மீது நடத்திவரும் தாக்குதல்களுக்கு பல்வேறு நாடுகளும் ஆதரவு தெரிவித்த போதும், ஐரோப்பாவில் உள்ள ஸ்பெயின் நாடு கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆயுத உதவிகள் செய்வதை ஸ்பெயின் நாடு கடுமையாக எதிர்த்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக இஸ்ரேல் நாட்டிற்கு ஆயுதங்கள் கொண்டு செல்லும் சரக்கு கப்பல்கள் தங்கள் நாட்டின் கடல் வழிப் பாதையை பயன்படுத்தக் கூடாது என ஸ்பெயின் கடுமையாக எச்சரித்து உள்ளது.

இந்த நிலையில் சென்னையில் இருந்து சுமார் 27 தொன் வெடிபொருட்களுடன் இஸ்ரேல் நோக்கி கிளம்பிய சரக்குக் கப்பல் ஒன்று வழக்கமாக செல்லும் செங்கடல் பகுதியைத் தவிர்த்து ஆபிரிக்காவை சுற்றி மத்திய தரைக்கடல் பகுதியை வழியாக சென்றுள்ளது. ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் அச்சம் காரணமாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஸ்பெயினுக்கு சொந்தமான கார்டேஜெனா துறைமுகத்தில் 'மரியேன் டேனிகா' என்ற இந்த கப்பலை வருகிற 21 ஆம் திகதி நிறுத்த அனுமதி கோரி அதன் கப்டன் அரசுக்கு விண்ணப்பித்துள்ளார்.

ஆனால் இஸ்ரேலுக்கு வெடிபொருட்கள் கொண்டு செல்லப்படுவதை எதிர்க்கும் வகையில் இந்தக் கப்பலை துறைமுகத்தில் நிறுத்த அனுமதி மறுத்து ஸ்பெயின் நாடு உத்தரவிட்டு ள்ளது.

இந்த தகவலை உறுதி செய்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ் மேனுவல் ஆல்பரஸ், தற்போது வளைகுடா நாடுகளுக்கு தேவை அமைதி மட்டுமே என்றும், கூடுதல் ஆயுதங்கள் தேவையில்லை என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சாலாக்களில்
# ...டாக்கும் பூச்சி கொல்லி
# ...யாக்கும் சர்வதேசம்

...மைப்பு, இந்தியாவில் ...த்து மசாலாப் ...நடவடிக்கைகளை




என்று கூறியுள்ளன.

இதனிடையே "எத்திலீன் ஒக்சைடின் பயன்பாடு இங்கு அனுமதிக்கப்படவில்லை, மேலும் மசாலாப் பொருட்களுக்கான அதிகபட்ச எச்ச அளவுகள் உள்ளன" என்று இங்கிலாந்து உணவு கண்காணிப்பு அமைப்பின் உணவுக் கொள்கை துணை இயக்குநர் ஜேம்ஸ் கூப்பர் என்பவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

"சந்தையில் பாதுகாப்பற்ற உணவு ஏதேனும் இருப்பின், நுகர்வோர் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய உணவு கண்காணிப்பு அமைப்பு விரைவான நடவடிக்கை எடுக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

எம்டிஹெச் மற்றும் எவரெஸ்ட் ஆகியவை தங்கள் தயாரிப்புகளை அமெரிக்கா, ஐரோப்பா, தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. 2022 ஆம் ஆண்டில் இங்கிலாந்து 128 மில்லியன் டொலர் மதிப்பிலான மசாலாப் பொருட்களை இறக்குமதி செய்தது. இதில் இந்தியாவினுடைய மசாலாப் பொருட்கள் கிட்டத்தட்ட 23 மில்லியன் மதிப்புடையதாகும். இவற்றின் மத்தியில் உலகளவில் மசாலாப் பொருட்களின் மிகப்பெரும் உற்பத்தியாளர், ஏற்றுமதியாளர் மட்டுமன்றி நுகர்வோராகவும் இருக்கும் இந்தியாவுக்கு இது ஒரு கரும்புள்ளியாகவே நீடிக்கிறது. (நி-6)

## 4 கைகள், 3 கால்களுடன் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள்



(ஜகர்த்தா)

இந்தோனேசியா நாட்டில் மிகவும் அரிதான நிகழ்வாக நான்கு கைகள், மூன்று கால்களுடன் இரட்டைக் குழந்தைகள் ஒட்டிப் பிறந்துள்ளன.

அதாவது இஸ்கியோபகஸ் டிரிபஸ் என அறிவியல் ரீதியாக அழைக்கப்படும் இந்த இரட்டையர்கள் மிகவும் அரிதாக இரண்டு மில்லியன் பிறப்புகளுக்கு ஒரு முறை மட்டுமே பிறக்கின்றனர்.

மேலும் பேச்சுவழக்கில் இப்படி பிறப்பவர்களை "ஸ்பைடர் ட்வின்ஸ்" என குறிப்பிடுகிறார்கள்.

வரலாற்றில் இது போன்ற நிகழ்வுகள் சிலது மட்டுமே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் கேஸ் ரிப்போர்ட் தளத்தில் இந்தோனேசிய சிறுவர்கள் குறித்து தகவல் வெளியாக உலகம் முழுவதும் இது கவனம் பெற்றுள்ளது.

குறிப்பாக இக் குழந்தைகள் 2018 ஆம் ஆண்டில் பிறந்துள்ளார்கள். அறுவை சிகிச்சையிலும் இம்மாதிரியான குழந்தைகள் அதிக சிக்கலான தன்மை கொண்டதாக அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் கேஸ் ரிப்போர்ட்ஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. காரணம், இக்குழந்தைகள் உடலின் மேற்பகுதியில் அல்லாமல், உடலின் கீழ் பாதியில் இணைந்திருக்கிறார்கள்.

இவர்களின் தனித்துவமான உடல் அமைப்பு காரணமாக, பிறந்த மூன்று ஆண்டுகளுக்கு இவர்களால் உட்கார முடியாமல் படுத்த நிலையிலேயே இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு அறுவை சிகிச்சையின் மூலம் மூன்றாவது கால் நீக்கப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திரமாக நிமிர்ந்து உட்காருவதற்கு அவர்களின் இடுப்பு மற்றும் கால்களையும் சிகிச்சையின் மூலம் வலுப்படுத்தியுள்ளார்கள்.

இருப்பினும் இவர்கள் ஒட்டிப்பிறந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கனடாவில் திடீரென பரவிய காட்டுத் தீ
## 6 ஆயிரம் பேர் வெளியேற்றம்



(ஒட்டாவா)

கனடாவின் மேற்கு மாகாணம் அல்பெர்டா பகுதியில் நேற்று முன்தினம் காட்டுத்தீ பரவியதாக கனடா செய்திகள் தெரிவிக்கின்றன.

காற்று வீச்சு அதிகமாக இருந்த காரணத்தால் கட்டுக்கடங்காமல் காட்டுத்தீ வேகமாக பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு உலங்கு வானூர்திகள் மூலம் விரைந்து தீப்பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை தீப்பரவலை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பீகன் ஹில், அபசன்ட், பிரேரி கிரீக் உள்ளிட்ட நகரிலுள்ள சுமார் 6 ஆயிரம் பொதுமக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வானிலை மாற்றம் மிகவும் மோசமாக இருக்கும் என்று கனடாவின் வனத்துறை அதிகாரிகள் அச்சம் தெரிவித்ததுடன் பலத்த காற்று வீசுவதால் தீயை அணைப்பது மிகவும் சிரமமாக உள்ளதாகவும் தெரிவித்தனர். (நி-6)

## வெப்ப இழப்பை ஆராய நாசா புதிய திட்டம்

(வோஷிங்டன்)

பூமியின் துருவப் பகுதிகளில் ஏற்படும் வெப்ப இழப்பை ஆய்வு செய்வதற்கும், மாறிவரும் காலநிலை குறித்த தகவல்களை தெரிந்து கொள்ள அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

அதன்படி இதற்காக தனி ஆய்வகம் அமைக்கப்பட்டு துருவப்பகுதிகளான ஆர்க்டிக் மற்றும் அந்தாட்டிக் காவை ஆய்வு செய்ய உள்ளது.

இந்த திட்டத்திற்காக 2 நவீன ரக செயற்கை கோள்களை இந்த மாதம் இறுதிக்குள் விண்ணில் செலுத்தப்பட்டு துருவ பகுதிகளின் மேல் உள்ள புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டு கண்காணிக்கப்பட உள்ளது.

இதன்மூலம் உலகின் கடல்நீர் மட்டம் உயர்வு, வானிலை மாற்றம் மற்றும் பனிக்கட்டிகள் உருகுதல் எத்தகைய விளைவுகளை அளிக்கக்கூடும் என்பதற்கான கணிப்புகளை அவர்கள் பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் 40,000 போலி வைத்தியர்கள்



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சுமார் 40,000 போலி வைத்தியர்கள் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சிலர் பல்வேறு வகையான போதைப் பொருட்களையும் மக்களுக்கு விற்பனை செய்வதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறான போலி வைத்தியர்கள் தொடர்பில் 1907 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் வழங்குமாறும் அவர் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (நி -6)

# கண்டியில் கடும் மழை
## தொடருந்து நிலையம் வெள்ளத்தில்

(கண்டி)

கண்டி நகரில் நேற்று முன் தினம் பெய்த கடும் மழையினால், கண்டி தொடருந்து நிலையம் உள்ளிட்ட நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளது.

இதவேளை தொடருந்து நிலையத்தை அண்மித்துள்ள முறையற்ற வடிகால் கட்டமைப்பு மற்றும் வடிகால்கள் மூடப்பட்டமையே, தொடருந்து நிலையம் நீரில் மூழ்கக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கண்டி நகரில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி ஒரே நேரத்தில் பெய்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

இதையடுத்து, போகம்பரவிற்கு பின்புறமாகவுள்ள மலைப்பகுதியிலிருந்து பெருமளவான வெள்ளநீர், தொடருந்து நிலையத்தை நோக்கி பெருக்கெடுத்திருந்ததாக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தொடருந்து நிலையத்தின் முன் பகுதி முற்றாக நீரில் மூழ்கியதுடன் தொடருந்து பாதைகளும் நீரில் மூழ்கியிருந்தது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 180 | 120-160 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 100 | 80-100 | 100 |
| தக்காளி | 180 | 180 | 120 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 130 | 180 | 100-130 | 180 |
| கோவா | 200 | 160 | 200 | 160 | 200 |
| கரட் | 300 | 220 | 200 | 200 | 250 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 | 100 |
| புடோல் | 200 | 180 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80-100 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 230 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 200 | 150 | 180. | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 400 | 500-700 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 280 | 400 |
| பீற்றூட் | 200 | 250 | 380 | 300 | 400 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 250 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 600 | 400-600 | 800 |
| போஞ்சி | 600 | 500 | 400 | 250 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 160 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 50-70 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 1200-1400 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 200 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 100 | 150 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

# இன்று ஒரு தகவல் 127



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வயிற்றுக் கோளாறு

ஒருவர் வந்தார். சார்! ஒரு நாள் கண்ணைப் பற்றி கூறினீர்கள். அதனாலே எனக்கு எவ்விதப் பயனும் இல்லை. ஏன் என்றால் எனக்கு கண்ணில் எந்த பிரச்சினையும் இல்லை. இன்னொரு நாள் காதைப் பற்றி கூறினீர்கள். அதனாலேயும் எனக்கு எவ்வித பயனும் இல்லை. ஏன் என்றால் எனக்கு காதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அடுக்கிக்கொண்டே போனார்.

சரி உங்களுக்கு எங்கே பிரச்சினை? என்று கேட்டேன். இங்கே தான் சார் என்று தன்னுடைய வயிற்றை தொட்டுக் காட்டினார். எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்று தானே எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால் இவரைப் பொறுத்தவரைக்கும் எண்சாண் உடம்பிற்கு வயிறே பிரதானம். அவர் உடம்பைப் பார்த்தாலே அதுதான் பிரதான பாகமாகத் தெரிகிறது. வஞ்சகம் இல்லாமலே அதை வளர்த்து வைத்திருக்கிறார். என்ன சார் இப்படி? என்று கேட்டால் எதற்கு வஞ்சகம் செய்தாலும் வயிற்றுக்கு வஞ்சகம் செய்யக் கூடாது என்கிறார். அதனாலே தான் இப்போ அவருக்கு அங்கேயே பிரச்சினை ஆரம்பமாகி இருக்கிறது.

மற்றைய பிரச்சனை என்ன என்று சொன்னால் அதற்கு எல்லாம் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கண்டு விடுவோம் என்று சொல்லி வைக்கலாம். இந்தப் பிரச்சினைக்கு எல்லாம் அது மாதிரி நடந்து கொண்டிருக்க முடியாது. விபரத்தை புரிந்து கொண்டு அதன்படி நடந்து கொண்டால் தான் முடியும். வயிற்றுக்கு உப்புசம் என்கிறது மனிதனுக்கு மட்டுமில்லை ஆடு மாடுகளுக்கு எல்லாம் உண்டாகிற ஒரு பிரச்சினை. வயிற்றுக்கு எப்படி காற்றுப் போகும். நாம் சாப்பிடும் போது சாப்பாட்டை மட்டும் விழுங்கினால் பரவாயில்லை. காற்றையும் சேர்த்தல்லோ விழுங்கிறோம். அதுவும் அவசரமாக சாப்பிடுபவர்கள் காற்றையும் அதிகமாக சாப்பிடுகிறார்கள்

மனக்கோளாறு உள்ளவர்கள், கவலைப்பட்டுக் கொண்டே சாப்பிடுபவர்கள் அதிகமான காற்றை ஆகாரத்தோடு சேர்த்து சாப்பிடுபவர்கள். சாப்பிடும் போது சிரிப்பது, சாப்பிடும் போது அரட்டை அடிப்பது இது எல்லாம் கூட நிறைய காற்றை உள்ளே தள்ளிவிடுகிறது. எதையாவது குடிப்பதற்கு கொடுத்தால் மடக்கு மடக்கு என்று முழுங்கக் கூடாது. நடந்து கொண்டே சாப்பிடக்கூடாது. இதனாலே எல்லாம் காற்று வயிற்றுக்குள்ளே போகின்றது.

லேசாக நடந்து போவது ஜீரணத்திற்கு நல்லது. பிஸ்கட், பழச்சாறு, சோடா இவை எல்லாம் வாயுத் தொந்தரவை அதிகமாக்கும். சோடா குடித்துக் கொண்டு ஒரு ஏப்பம் விட்டு விட்டால் எல்லாம் சரியாகிப் போய்விடும் என்று நினைப்பது தப்பு. ஏப்பம் விட்டதற்கு பின்பு கொஞ்சம் சுகமாக இருக்கிற மாதிரி இருந்தாலும் பெரும் பகுதி காற்று வயிற்றிலே தான் தங்கி இருக்கும். வாயு தொந்தரவினாலே வயிற்றிலே வலி இருந்தால் வெந்நீர் குடிக்கலாம். வெந்நீர் ஒத்தனம் கொடுக்கலாம். இதனாலே கொஞ்சம் குறையும்.

அமில எதிர்ப்பு மருந்து சாப்பிடலாம். இதையும் மாத்திரையாக சாப்பிடுவதை விட திரவமாக சாப்பிடுவது தினமும் நல்லது. சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்து இதை சாப்பிடலாம்.

புளித்த ஏப்பம் என்பது எதனாலே வருகிறது? வயிற்றிலே இருந்து அமிலம் மேலே எழும்பி உணவுக்குழலிலே ஏறுவதனாலே வருவது. இதனாலே நெஞ்சு பகுதியிலே எரிச்சல் வரும். அவசர அவசரமாக சாப்பிடுவது குடிக்கிறது, உதர விதானத்திலே உணவுக்குழல் அழுத்துகிறது. உடம்பு குண்டாக இருக்கிறது சாப்பிட்ட உடனே படுக்கிறது இதனாலே எல்லாம் வரும். கருவுற்ற தாய்மாருக்கு இது ஒரு பிரச்சினை.

புளித்த ஏப்பத்திற்கு அமில எதிர்ப்பு மருந்து சாப்பிட வேண்டும். இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் உணவுக்குழல்-வயிறு இங்கே உள்ள உட்புற சுவரிலே உள்ள திசுக்களை அமிலம் அரிக்க ஆரம்பித்து விடும். அதன்பின்பு புண்ணாகி விடும். சாப்பிட்ட உடனே சொக்லேட் பெப்ரமின், மது, தேநீர்... புகையிலை இந்த ஞாபகம் எல்லாம் வரக்கூடாது. இதெல்லாம் உணவுக்குழல் கீழ் முனையிலே இருக்கின்ற வால்வை தளர வைத்து விடும்.

இதனாலே அமிலம் சுலபமாக மேலே ஏறுவதற்கு வசதியாக போய் விடும். வயிற்றிலே மேல் பகுதியிலே எரிச்சல் உண்டாகிறது என்றால் அங்கே உள்ள சுவர் பரப்பிலே புண் உண்டாகி இருக்கு என்று அர்த்தம். அப்படி இருந்தால் மது-தேநீர் காரமசாலா, அஸ்பிரின் இதை எல்லாம் தொடவே கூடாது.

சாப்பாட்டு அளவையும் குறைத்துக் கொள்ள வேண்டும். மெதுவாக சாப்பிட வேண்டும். வயிற்றுப் புண்ணுக்கு உற்சாகம் கொடுத்து அதை ஊக்கப்படுத்துவது எது தெரியுமா? அஸ்பிரின், புகையிலை, மது இது மூன்றும் தான். தேநீர் அமில சுரப்பை அதிகமாக்கும்.

வயிற்றிலே புண் இருந்தால் மூன்று வேளை சாப்பிடுவதற்கு பதிலாக அதனுடைய அளவு சாப்பாட்டை பிரித்து ஆறு வேளையாக சாப்பிடலாம். எல்லோருக்கும் பொதுவாக தெரிந்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான விடயமாகும். கொஞ்சமாக சாப்பிடுங்கள். மெதுவாக சாப்பிடுங்கள். உட்கார்ந்து சாப்பிடுங்கள். எரிச்சல், கோபம், கவலை இவை எல்லாம் இல்லாமல் சாப்பிடுங்கள். நொறுங்க சாப்பிட்டால் நூறு வயது. எதையாவது சாப்பிடக்கூடாது. எதை சாப்பிட்டால் நல்லதோ அதை சாப்பிட வேண்டும்.

சில பேரை ஹொட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய் என்ன சாப்பிடுறீங்கள் என்றால் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்பார்கள். அது தப்பு சார். வயிற்றிலே வலி என்று சொல்லிக் கொண்டு உங்களிடம் வந்தேன். நீங்கள் சொன்னது எல்லாம் கேட்ட பின்பு எனக்கு தலைவலியும் சேர்ந்து வந்து விட்டது. உடனே அதற்கு என்ன ஒரு தகவலை ஆரம்பித்து விடாதீங்கள். இப்போது விட்டுவிடுங்கள். இன்னும் ஒரு நாள் சாவகாசமாக வந்து விடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் முன்மாதிரிகையான செயற்பாடு - பலரும் பாராட்டு



(தருமபுரம்)

கிளி/ கோணாவில் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சை முடிவடைந்த பின் பாடசாலை சூழலைச் சிரம தானம் செய்து சுத்தப்படுத்திய பின் தமது ஞாபகார்த்தமாக பயன்தரு மரக்கன்றுகளை பாடசாலை வளாகத்தில் நாட்டி வைத்துள்ளனர்.

குறித்த மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினை பலரும் பாராட்டி வருகின்றனர். (நி-6-100-316)

## பனை ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்ட அமெரிக்கத் தூதுவர்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை காரியாலயத்தை நேற்று வெள்ளிக்கிழமை காலை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பார்வையிட்டார்.

இதன்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ,பனை ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர்கள், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பலர் கலந்து கொண்டனர் .

இதன்போது பனை அபிவிருத்திச் சபையினுடைய உற்பத்திகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## பிரம்மஞானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மன வளக் கலை மன்ற அறக் கட்டளை வழங்கும் "பிரம்ம ஞானம்" எதிர்வரும் 24, 25, 26 முறையே வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி அன்று காலை 6 மணிக்கு தலைவரும் பேராசிரியருமான சி.முருகானந்தவேலின் தலைமையில் உரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து துணைத் தலைவர் குழந்தைவேல் செயலாளர் வி.பாஸ்கரன் ஆகியோர்களின் வாழ்த்துரையும், அதனைத் தொடர்ந்து காலை உடற் பயிற்சிகளை பேராசிரியர் கே.செல்வகுமார் வழங்குவார். அத்துடன் பிரம்ம ஞானத்திற்கான தெளிவுரைகள் முதுநிலைப் பேராசிரியர் அருள்நிதி கே.ஆர். முனிரெத்தினம் வழங்கவுள்ளார்.

அறிவுத்திருக்கோவிலில் அடிப்படைப் பயிற்சிகளை பெற்று 1, 2, 3 அகத்தாய்வு பயிற்சிகளைப் பூர்த்தி செய்தோரும் ஏற்கனவே பிரம்ம ஞான வகுப்பில் பங்குபற்றியோரும் உங்களது சான்றிதழ்களுடன் அலுவலகம் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

## வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கு 57.4 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட நிதித் திட்டத்தின் கீழ் 57.4 மில்லியன் ரூபாய் நிதி பல் வேறு வேலைத்திட்டங்களுக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் பின் தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதி வவுனியா மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 120 நிர்மாணப் பணிகளுக்கும், 46 உபகரணங்கள் வழங்கல் செயற்பாடுகளுக்கும் என 57.4 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டங்களுக்கான உத்தியோக பூர்வ கடிதங்கள் அப்பகுதி கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர்களிடம் இதன்போது கையளிக்கப்பட்டது. பாடசாலைகள், மைதானங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம மட்ட பொது அமைப்புக்கள் என்பவற்றுக்கே இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (நி-6-250)



கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இரத்த தான முகாம் நடைபெற்றது. கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் இராணுவத்தினர் இணைந்து குறித்த இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தனர். இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் என முப்படையினரும் இணைந்து குருதிக் கொடைகளை வழங்கி வைத்துள்ளனர். (படம்: யதுபாஸ்கரன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3119

**திலக்ஷன்**




**தன்விகா**




**சஞ்சீவ்**




**அபிநஜா**




**நதுஷா**




**அபிஷேக்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 484





இவ்வளவு பத்திரமான கப்பலை விட்டு அந்த முட்டாள்கள் இருவரும் படகில் ஏறிப்போய் விட்டதை நினைத்து வந்தியத்தேவன் அனுதாபப்பட்டான். ஆனால் அந்தப் படகில் அமைப்பும் விசித்திரமானது தான். எவ்வளவு காற்று அடித்தாலும் மழை பெய்தாலும் அதை மூழ்கடிக்க முடியாது. அப்படிப் படகு உடைந்து முழுகினாலும் பக்கத்தில் அதனோடு சேர்த்துக் கட்டியுள்ள கட்டை ஒன்று இருக்கிறது. அதைப் பிடித்துக் கொண்டு அந்தக் கொலை பாதகர்கள் தப்பிக் கரை சேர்ந்து விடுவார்கள்! அநேகமாகக் கோடிக்கரைக்குச் சமீபமாகப் போய்க் கரை ஏறுவார்கள்.

கோடிக்கரையிலிருந்து வந்தியத்தேவனுடைய உள்ளம் பழையாறைக்குத் தாவியது. சக்கரவர்த்தி திருக்குமாரிக்குத் தனக்கு நேர்ந்த கதி எப்படித் தெரியப்போகிறது? அவள் இட்ட பணியை நிறைவேற்றும் முயற்சியிலே தான் நடுக்கடலில் முழுகியதை யார் அவளுக்குத் தெரிவிக்கப் போகிறார்கள்? கடல் தெரிவிக்குமா? காற்று சென்று சொல்லுமா? கடவுளே! அந்த மாதரசியைச் சந்திப்பதற்கு முன்னாலேயே நான் இறந்து போயிருக்கக்கூடாதா? போர்க்களத்தில் வீரமரணம் எய்தியிருக்கக் கூடாதா? சொர்க்க பூமியைக் கண்ணால் பார்க்கச் செய்துவிட்டு உடனே அதல பாதாளத்தில் தள்ளுவது போல் அல்லவா இருக்கிறது!

காற்றின் வேகம் அதிகமாகிக் கொண்டிருந்தது. கடலின் கொந்தளிப்பு மிகுதியாகிக் கொண்டிருந்தது. கப்பலின் பாய்மரங்கள் பேய் பிசாசுகளைப் போல் பயங்கரமான சப்தமிட்டுக் கொண்டு ஆடின.

இருள் மேலும் மேலும் கரியதாகிக் கொண்டு வந்தது. இருட்டை விடக் கரியதான இருட்டு எப்படி இருக்க முடியும்? அப்படியும் இருக்க முடியும் என்று தோன்றுகிறது.

திடீரென்று வானத்தில் ஒரு மின்னல் தோன்றி ஒரு மூலையிலிருந்து ஒரு மூலை வரை பாய்ந்தது. அதற்குப் பிறகு தோன்றிய இருட்டு இருளைவிடக் கரியதாயிருந்தது.

மின்னலைத் தொடர்ந்து இடிமுழக்கம் கேட்டது. கப்பல் அதிர்ந்தது. கடல் அதிர்ந்தது திசைகள் அதிர்ந்தன.

இன்னொரு மின்னல் அடி வானத்தில் இருளைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது. அது மேலும் மேலும் நீண்டு, கப்பும் கிளையும் விட்டுப் படர்ந்து, பற்பல ஒளிக்கோலங்கள் ஆகாசமெங்கும் போட்டு வானையும் கடலையும் ஜோதிமயமாகச் செய்துவிட்டு, அடுத்த கணத்தில் அடியோடு மறைந்தது. இடிமுழக்கம் தொடர்ந்தது. அம்மம்மா! அண்டகடாகங்கள் வெடித்து விழுகின்றன என்பதில் சந்தேகமில்லை. மேலும் மின்னல்கள் இடி முழக்கங்கள். 'இன்னும் வானம் பிளக்கவில்லையே. இது என்ன அதிசயம்!" என்று வந்தியத்தேவன் எண்ணமிட்டானோ, இல்லையோ, அந்தக் கணமே ஆகாசம் வெடித்துப் பிளந்தது. வெடித்த பிளப்பின் வழியாகப் பிரளய வெள்ளம் பொழிந்தது.

ஆம் அதை மழை என்றே சொல்வதற்கில்லை. வான வெளியில் ஒரு கடல் குமுறிக் கொண்டிருந்தது. அது திடீரென்று தோன்றிய பிளவின் வழியாகக் கொட்டுவது போலவே இருந்தது.

கடல் அலைகள் ஆவேச தாண்டவமாடின. மின்னல் வெளிச்சத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் ஆடும் மலைச் சிகரங்கள் காட்சி அளித்தன. காற்றின் கும்மாளம் உச்சத்தை அடைந்தது. ஆடும் மலைச் சிகரங்களை அப்படியே பெயர்த்து எடுத்து வாயு பகவான் வான வெளியில் விசிறி எறிந்து விளையாடினார். வந்தியத்தேவனுடைய கப்பல் மீதும் அந்த நீர்மலைகளில் சில வந்து மோதின.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வீராதி வீரன்!



(நேற்றைய தொடர்ச்சி...)

“என்னைப் பார்த்ததும் நடுங்கியே பலர் செத்து இருக்கின்றனர். இவன் இவ்வளவு துணிவாகப் பேசுகிறானே. முதலில் இவன் வலிமையை அறிய வேண்டும். பிறகு இவனைக் கொன்று தின்ன வேண்டும்” என்று நினைத்தது பூதம்.

“உன்னைப் பார்த்தால் வலிமையானவனாகத் தெரியவில்லையே. உன் வலிமையைக் காட்டு பார்ப்போம்,”என்றது.

என்ன செய்வது என்று சிந்தித்தான். தன் சட்டைப் பையிலிருந்த வெண்ணெய் உருண்டையை எடுத்தான். மரத்தில் இருந்த படியே அதை மேலே தூக்கிப் போட்டுப் போட்டு பிடித்தான்.

“ஏ! பூதமே! நான் தூக்கிப் போட்டு பிடிப்பது என்ன? சரியாகச் சொல். பார்ப்போம்,”

“கூழாங்கல்,” என்றது பூதம்.

“உனக்கு அறிவு உள்ளது. கூழாங்கல் என்று சரியாகச் சொன்னாய். இப்போது என் வலிமையைப் பார்,” என்ற அவன் அந்த உருண்டையைத் தன் கைகளுக்குள் வைத்து அழுத்தினான். அது தூள் தூளாகிக் கீழே விழுந்தது.

இதைப் பார்த்த பூதம் திகைத்தது. “கூழாங்கல்லைக் கைகளுக்குள் வைத்துத் தூள் ஆக்குகிறானே. நம்மால் அப்படிச் செய்ய முடியாதே. இவன் மிகுந்த வலிமையானவன் தான்” என்று நினைத்தது.

“கீழே இறங்கி வா... உனக்கு இன்னும் ஒரு சோதனை வைக்கிறேன்,” என்றது.

முட்டாள் பூதத்தை எப்படியும் ஏமாற்றி விடலாம் என்று கீழே குதித்தான் அவன்.

“அடுத்து என்ன சோதனை?” என்று அதட்டுவது போலக் கேட்டான்.

“உன் வலிமையைக் காட்டிவிட்டாய். என் வலிமையைப் பார்,” என்றது பூதம்.

கீழே கிடந்த கல் ஒன்றை எடுத்தது. அந்தக் கல்லைத் தலைக்கு மேலே வானத்தை நோக்கி வீசியது. மேலே சென்ற அந்தக் கல் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது. அரை மணி நேரம் கழித்துக் கீழே விழுந்தது.

“எப்படி என் வலிமை? இதே போலக் கல்லை எறிந்து உன் வலிமையைக் காட்டு,” என்றது.

“நான் கல்லை மேலே வீசினால் கீழே விழவே விழாது. வானத்தைக் கிழித்துக் கொண்டு சென்று விடும். நீயே பார்,” என்ற அவன் தன் பையிலிருந்த குருவியை எடுத்தான். அதை வானத்தில் எறிந்தான். அந்தக் குருவி பறந்து சென்றது.

உண்மையை உணராத பூதம் கல் கீழே விழும் என்று காத்திருந்தது. நீண்ட நேரமாயிற்று.

“ஆ! இவன் என்னை விட வலிமை மிகுந்தவனாக உள்ளான். இவன் வீசிய கல் கீழே விழவே இல்லையே... கவனமாக இல்லாவிட்டால் இவன் என்னைக் கொன்று விடுவான். இனிமையாகப் பேசி இவனை ஏமாற்ற வேண்டும்” என்று நினைத்தது.

“என் காட்டிற்கு வந்துள்ள நீ என் விருந்தினர். என் வீட்டில் விருந்து சாப்பிட்டு விட்டுத் தான் செல்ல வேண்டும்,” என்று அன்புடன் அழைத்தது பூதம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது, ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் உயிரினும் மேலான உறவுகளே! உங்கள் ஆத்ம பலம் வெற்றி தரும்

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எம் உயிரினும் மேலான எம் தமிழ் உறவுகளே! நீங்கள் புனிதமான ஆத்மாக்கள். உங்களை வாழவிடாமல் கொன்ற ஈனர்கள் பெருந்துன்பப்படுகிறார்கள்.

உங்களைக் கொன்று சிங்கள ஆட்சியைக் காப்பாற்றியதாக மார்தட்டியவர்கள் ஆட்சிப் பீடத்தை விட்டு துரத்தப்பட்டுள்ளனர்.

யார் தங்களைத் தோள் மீது தூக்கிக் கொண்டாடுவார்கள் என்று நினைத்தார்களோ அந்த மக்களே அவர்களை ஓடோட விரட்டினர் என்றால், இதைவிட்ட வியப்பு வேறு எதுவாக இருக்க முடியும்.

ஆம், உலகில் முன்பும் இல்லை. இனியும் இல்லை என்பது போல ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராகச் சிங்கள மக்கள் ஆர்ப்பரித்தெழுந்தனர் என்றால், அதற்குப் பின்னணியாக உங்கள் ஆத்ம பலமே இருந்தது என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

உண்மை. பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ முதலில் தனது பதவியை இராஜினாமாச் செய்கிறார்.

அடுத்து ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி மாளிகையில் இருந்து தப்பி ஓடுகிறார்.

அவர் தப்பிச் சென்றுவிட்டார் என்ற செய்தியை அறிந்ததும் ஆத்திரமடைந்த சிங்கள மக்கள், ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுகின்றனர்.

ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்ட மக்கள் அங்கு எப்படி நடந்து கொண்டனர் என்பதை உலகம் நேரில் கண்டுகளித்தது.

ஒரு பெரும் ஆட்சிப்பீடத்தில் சிங்கள மக்கள் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள் என்றால் அதற்குக் காரணமும் நியாயமும் உண்டு.

அதாவது இந்த நாட்டின் மிக மோசமான ஒருவர் ஜனாதிபதியாக இருந்தபோது இந்த மாளிகை அழுக்குப்பட்டுவிட்டது.

தவிர, மிகக் கொடூரமான ஒருவர் ஆட்சி நடத்திய இந்த மாளிகைக்கு மரியாதை கொடுத்தால், அது கொடியவர்களுக்கு மதிப்புக் கொடுத்ததாக ஆகிவிடும். அதனாலேயே அதிகார மாளிகையில் சிங்கள மக்கள் அவ்விதம் நடந்து கொண்டனர் என அரசியல் விமர்சகர்களின் விளக்கங்களும் அறியப்பட வேண்டியவை.

ஆக, முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எங்கள் உறவுகளே! நீங்கள் நிச்சயம் குற்றவாளிகளைத் தண்டித்தே ஆகுவீர்கள். அந்தத் தண்டனையில் ஒன்றுதான் அவர்களின் பதவி பறிப்பு.

பதவி பறிப்போடு உங்கள் ஆத்மா அடங்கும் என யார் நினைத்தாலும் அஃது ஆத்ம பலத்தை – ஆற்றாது அழுகின்ற கண்ணீரின் படை பலத்தை அறியாதவர்களின் நினைப்பாகவே இருக்க முடியும்.

ஆகையால் எங்கள் அரசியல் பலத்தை – ஆயுத பலத்தைக் கடந்து, உங்களின் ஆத்ம பலம் சாதித்துவிட்டது. இனியும் சாதிக்கும். சரித்திரம் படைக்கும். அப்போதுதான் ஈனர்கள் தாங்கள் செய்த கொடுமையை உணர்வர். இது சத்தியம்.

# எண்மரைக் கொன்ற சார்ஜண்ட்டுக்கு எவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கலாம்?

## கோட்டாவிடம் விளக்கம் கோரும் உயர் நீதிமன்றம்

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கவிற்கு பொது மன்னிப்பு வழங்கியமை தொடர்பில் நீதிமன்றில் உண்மைகளை சமர்ப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நோட்டீஸ் அனுப்புமாறு உயர் நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஐந்து வயதுக் குழந்தை உட்பட எட்டு இடம்பெயர்ந்த பொது மக்களை வெட்டிக் கொன்ற வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறித்த சந்தேக நபருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருந்தார்.

இதனை எதிர்த்து மாற்றுக் கொள்கை மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்யசோதி சரவணமுத்துவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, யசந்த கோதாகொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## தரமற்ற இறைச்சி விற்பனை உணவகமொன்றுக்கு சீல்

### தெல்லிப்பழையில் சம்பவம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் தரமற்ற இறைச்சி கொத்தினை வழங்கியமை தொடர்பில் குறித்த உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஊடகவியலாளர் ஒருவர் குறித்த கடையில் மாட்டு இறைச்சி கொத்தினை வாங்கி உண்ட வேளை குறித்த உணவில் சந்தேகத்துக்கிடமான வகையில் தோற்றமளிக்கும் அதிக ரோமங்களை கொண்ட இறைச்சி துண்டொன்று தென்பட்டுள்ளது.

இதனையடுத்து ஊடகவியலாளர் கடையிலிருந்து உணவிற்கான பற்றுச்சீட்டு குறித்த இறைச்சி உள்ளிட்ட புகைப்படம் என்பவற்றை ஆவணப்படுத்தி, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பரா. நந்தகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அதனைத் தொடர்ந்து மோசமான இறைச்சியை வழங்கினார் என்பது தொடர்பான முறைப்பாடு ஒன்றினை குறித்த ஊடகவியலாளர் சுகாதார வைத்திய அதிகாரிக்கு கடிதம் மூலம் அனுப்பிவைத்தார்.

முறைப்பாட்டு கடிதத்தினை ஆதாரமாகக் கொண்டு நேற்று முன்தினம் குறித்த உணவகத்தை சோதனைக்கு உட்படுத்திய பொது சுகாதார பரிசோதகர்கள் பாவனைக்கு உதவாத இறைச்சி இருந்துள்ளமையைக் கண்டறிந்துள்ளனர் அத்துடன் தூய்மையற்ற முறையிலே உணவுகளை கையாண்டமை இறைச்சியினை கொள்வனவு செய்தமைக்கான பற்றுச்சீட்டு இல்லாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தெரியவந்தன.

அதனைத் தொடர்ந்து குறித்த உணவகம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்று நீதி மன்றால் 65,000 ரூபா தண்டப் பணம் அறவிட்டு உணவகம் சீல் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## கசிப்பு உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் முற்றுகை

### ஒருவர் கைது

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் நேற்று காலை சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றினை முற்றுகையிட்டு பொலிஸார் 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததோடு கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்களினையும் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பெரியகுளம் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்ட பொலிஸ் குழுவினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10,299)

## சுகயீனமுற்ற யானை உயிருடன் மீட்பு

(பள்ளமடு)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பள்ளமடு வயல் பகுதியில் சுகயீனமுற்ற நிலையில் சுமார் 2 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை (17) காலை உயிருடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யானை ஒன்று சுகயீனமுற்ற நிலையில் காணப்பட்டதை அப்பகுதி மக்கள் அவதானித்த நிலையில் உடனடியாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த நிலையில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மிருக வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து சுகயீனமுற்று காணப்பட்ட யானையை மீட்டு யானைக்கு உரிய சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (ம-7,10,285)

## மதகுரு ஒருவருடைய சங்கிலி அறுப்பு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் மதகுரு ஒருவருடைய இரண்டு பவுண் சங்கிலியைக் கொள்ளையர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த மதகுருவின் வீட்டுக்குச் சென்ற இருவர் ஜாதகம் எழுத வேண்டும் எனக் கூறி அவரை நெருங்கி அவருடைய கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்துள்ளனர் என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10)

## புதுக்குடியிருப்பு நகரில் அநாமதேய பொதி

### பொதுமக்கள் அச்சம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில காணப்பட்ட அநாமதேய பொதியினால் குறித்த பகுதியில் பரபரப்பு நிலை ஏற்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக்கு அருகாமையில் மர்ம பொதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளதனையடுத்து குறித்த பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு நிலை ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குறித்த பொதியினை பரிசோதனை செய்ய முற்பட்ட போது குறித்த பொதியின் உரிமையாளர் தன்னாலே இப்பொதி தவறவிடப்பட்டது என தெரிவித்து உரிய அடையாளங்களை காட்டி பொலிஸாரிடம் இருந்து பொதியை வாங்கி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலை சாட்சிய முற்றம் நல்லூரில்





(யாழ்ப்பாணம்)

தமிழினப் படுகொலையின் வரலாறுகளை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நோக்கில் அரச பயங்கரவாதம் நடத்திய இனப்படுகொலைகளை திகதி வாரியாக தொகுத்து யாழ்ப்பாணத்தில் ஆவணக்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

நல்லூரடியில் உள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தின் முன்னால் "தமிழினப்படுகொலை சாட்சிய முற்றம்" என்ற பெயரில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஆவணப் பிரிவினரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரச பயங்கரவாதத்தினால் நாம் அனுபவித்தவற்றை ஆவணப்படுத்தல்கள் மற்றும் நினைவுகூர்வதன் ஊடாக அடுத்த சந்ததியினருக்கு நாம் இழந்தவற்றையும், எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கடத்திச் செல்ல வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (நி-6-33)

# வலிசுமந்த உறவுகளின் உயிர்காத்த உணவு



யாழில்



சாவகச்சேரியில்



கிளிநொச்சியில்



வவுனியாவில்

(படங்கள்- சிவசாந்தன்.சுபேசன்.சப்தசங்கரி. தேவானந்தன்.வசந்தரூபன்)

# ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய ஜூலிசங்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் என வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இற்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் இற்கும் இடையில் நேற்று ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க கூடிய கண்காட்சி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம், ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கிற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளதாக தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், மாணவர்களுக்கு இலவச ஆங்கில மொழி வகுப்புக்களை ஆரம்பிக்க உள்ளதாகவும், அதற்கான ஒத்துழைப்புகளை ஆளுநரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.(நி-6-33)

# இராசிபலன்

18.05.2024
வைகாசி 05, சனிக்கிழமை
தசமி பிற்பகல் 12.43 மணிவரை

உத்தரம் பின்னிரவு 1.29 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை
இராகுகாலம்8.53-10.23 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தராடம்,திருவோணம்.

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர்கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்,பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், மகிழ்ச்சி பெருக இஷ்டதெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்,தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.




குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், அன்னிய தேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.




மருத்துவச் செலவுகள் கூடும், நீங்கள் நல்லவர்கள் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், விரயங்கள் மேலோங்கும் நாள்.




தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாடு முன்னேற்றம் தரும், உறவினர் வழியில் நன்மையுண்டு.

எதையும் மன்னிக்கும் நீதிமன்றம் தாயின் இதயம் மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

முள்ளிவாய்க்கால் போரின் 15 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின், முன்னாள் போராளிகளின் உறவு கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டக் கைதிகளின் குடும்பங்களை நேற்று சந்தித்ததாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் புகைப்படங்களுடன் பதிவிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் போர் முடிவடைந்த 15ஆவது ஆண்டு நிறைவில் காணாமல் ஆக்கப்பட்டோர், முன்னாள் போராளிகளின் உறவுகள் மற்றும் முன்னாள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டக் கைதிகளின் குடும்பங்களைச் சந்தித்ததாகவும், இன்றும்பல இலங்கை பிரஜைகள் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர்.

அன்புக்குரியவர்களை நினைவு கூர்வதற்கு அனைத்து குடும்பங்களுக்கும் உரிமை உண்டு. அவர்களின் கதைகள் அமைதியான, நீடித்த அரசியல் தீர்வின் அவசியத்தை நினைவூட்டுகின்றன எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## கொழும்பில்...

தாக அந்த அமைப்பின் உறுப்பினர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் நினைவேந்தல்களுக்கு ஆதரவாகவும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தும் வகையிலும் இந்த நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, வெள்ளவத்தை தொடருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள கடற்கரைக்கு, வெள்ளை மலர்களுடன் வருமாறு அவர் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (ம-7,10)

## நினைவேந்த...

ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவிக்கையில்,

"15 வருடங்களாக நாங்கள் இழந்தவர்களை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

இருப்பினும் பசி, பட்டினியில் கிடந்தவர்களை கொத்து கொத்தாக கொன்று குவித்ததற்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

இதன் காரணமாக, இறுதியில் நாங்கள் சர்வதேசத்திடமும் மண்டியிட்டுள்ளோம். இந்நிலையில், இறந்தவர்களுக்காக எங்களால் மேற்கொள்ளப்படும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு யாராலும் தடை விதிக்க இயலாது" என கூறியுள்ளார். (ம-7,10)

## 14 இலங்கை...

பகுதியில் வைத்து குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் குறித்த மீனவர்களின் படகுகளையும் இந்திய கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த இலங்கை மீனவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)

## காணாமல்...

மீண்டும் நினைவுபடுத்துகின்றது என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் டேர்க், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் அவர்கள் குறித்து அக்கறையுள்ளவர்களும் நீண்டகாலமாக காத்திருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்குள்ளது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர், இந்த குற்றங்களை முழுமையாக விசாரிக்க வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றங்கள் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், அன்புக்குரியவர்களை மாத்திரம் வேதனைக்குள்ளாக்கவில்லை ஒட்டுமொத்த சமூகங்களையும் இலங்கை சமூகத்தை முழுமையாகவும் வேதனைப்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்து 18ஆம் திகதியுடன் 15 வருடங்களாகின்றது என தெரிவிக்கும் ஐ.நாவின் அறிக்கை 1970கள் முதல் 2009 வரை இலங்கையில் பரந்துபட்ட அளவிலான வலிந்து காணாமலாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. இதில் இலங்கையின் பாதுகாப்பு படையினரும் துணை இராணுவ குழுக்களும் ஈடுபட்டன எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஏப்ரல் 2024ம் ஆண்டு கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தின் முன்னால் வழங்கிய பேட்டியில் சாந்தி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தனது கணவர் 2009இல் காணாமல்போனது குறித்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அன்று காலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து சென்றார். ஐந்தரை மணியளவில் அவர் கடலில் வைத்து கைது செய்யப்பட்டார் என்ற தகவல்கள் கிடைத்தன கடற்படையினர் அவரை கைது செய்வதை அவருடன் சென்றவர்கள் பார்த்துள்ளனர், அவரை கப்பலிற்குள் வீசியுள்ளனர் அவர் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் நிர்வாணமாக காணப்பட்டார் என சாந்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச அமைப்புகளிடம் அவர் தனது கணவர் காணாமல் போனமை குறித்து முறையிட்டுள்ளார்.

நான் எனது முறைப்பாட்டை ஐ.நா செஞ்சிலுவை சங்கம், அரசாங்கத்திடம் பதிவு செய்தேன் நான் எனது கணவர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டார் என்பதை உறுதி செய்தேன் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## கிணற்...

நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் மனைவி ஏற்கெனவே உயிரிழந்துள்ளார். அவரது பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். இந்நிலையில் குறித்த நபர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் மனவிரக்தியடைந்த அவர் நேற்றைய தினம் அவரது வீட்டில் உள்ள கிணற்றில் விழுந்து உயிர்மாய்த்துள்ளார். இந்த காட்சி அங்கிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## மரத்திலிருந்து...

நிலையில் தவறிவிழுந்ததில் சுயநினைவை இழந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் பலாலி இராணுவ முகாமில் சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.05.17
சீட்டிழுப்பு இலக்கம் 5478
P 3 3 4 2 0 8
அத சம்பத
P 4 2 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 053
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1508
G 08 52 69 74 G
02987

மெகா பவர்
திகதி 17/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1826
G 10 01 40 41 56
23102

லக்கி 7 VIP
திகதி 2024.05.17
சீட்டிழுப்பு இலக்கம் 304
U 1 9 6 3 6 7 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3720
சீட்டிழுப்பு திகதி 17.05.2024
G 18 27 38 80
G
04370

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.17
சீட்டிழுப்பு இலக்கம் 0787
கும்பம் 04 19 30 37 கும்பம்
11507 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
17.05.2024 வெற்றி வாரம் 186
J 2 6 4 5 3 4
A 91939
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.22,443,788.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2452 சீட்டிழுப்பு திகதி 17.05.2024 தினம் வெள்ளி
19 38 62 65 K
37026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 88,925,892.00

சனிதா
திகதி 2024.05.17 வெற்றி வாரம் 4613 வர்ணம் செம்மஞ்சள்
01 17 66 72 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.59,116,278.40
28229

சசிரி
வெற்றி வாரம் 478
சீட்டிழுப்பு திகதி 2024.05.17
பச்சை
15 17 38
07
73985
ரூ. 2,892,120/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4164 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.17 தினம் வெள்ளிக்கிழமை
02 10 37 57 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.3,206,533.20
193712

ஜய
X 33 16 25 72 74
1628
17.05.2024 வெள்ளி
193735
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 523,180,656.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2278
சீட்டிழுப்பு திகதி : 2024.05.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.113,851,592/-
36 55 71 76 Z
143290


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

## STUDY IN UK & WORK VISA

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள

வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**

புதிய உயர்கல்லூரி வளாகம்

ஆரியகுளம்,யாழ்ப்பாணம்

077 64 212 64

கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

(786)

## CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686

076 424 7111

**Expo Net Overseas Consultants**

345, Kasthuriyar Road, Jaffna.

(511)

## V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322

077 77 19 322

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0396)

# DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

## A/L 2026

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 25.05.2024 காலை 8.00 மணி (சனி)

முன் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

நிர்வாகம் : 077 7789 815

(C-0394)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

077 88 62 927

(757)

## KBK - கந்தர்மடம்

### A/L 2026

(தமிழ் / ஆங்கில மொழி மூலம்)

**கணக்கீடு**

திரு.க.பா. பாலகஜன் SLTS

B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)

Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl

ஆரம்பம்: 20/05/2024 திங்கள் மாலை 04.30 மணி

A/L 2024, A/L 2025 பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

- 077 4520 043

(742)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள்

(C-0396)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

0777-068-777

# TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி,.லிங்கம் கூல்பார் அருகாமை.

## A/L 2026

தொழில் நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)

காலை 8.30 மணி

A/L 2024,2025 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு : 077 017 5346

(C-0389)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 259/= | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 180/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg கீட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 1 Lux சோப் றோஸ் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 400g Anlene அன்லீன் | - 1300/= | ~~1350/=~~ |

400g Anchor

995/=

~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket

0777 8080 30

(797)

## A/L தொழினுட்பப்பிரிவு

smart thinking leads to innovate

# Techna

Technical Institute

## புதிய பிரிவு ஆரம்பம்

## A/L 2026

19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)

காலை 8.00 மணிக்கு

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

M.விஷ்ணு | P.நிறோஜனன்

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

S.சக்தி

பொறியியல் தொழினுட்பவியல்

S.மயூரதன்

ICT | கணிதம்

T.லவன் | T.சசிகரன்

விவசாய விஞ்ஞானம் | புவியியல்

S.சஜீபன் | S.Pகரன்

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE முறையான தரப்படுத்தல்.
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்.
- இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?

உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

077 170 3549

(762)


# 25ஆவது பிறந்த தினமும் நினைவலைகளும்

அமரர்

**லோகேஸ்வரன் பிரவீனன் (கபிலன்)**

(யா/வயாவிளான் மத்திய கல்லூரி மாணவன் உயர்தரம் - 2018)



என் தாயின் கருவறையில்
எனக்கு முன் குடியிருந்தவன்
என் தாயின் மடி சுரந்த பாலை எனக்காக
என் பசிக்காக மீதம் வைத்தவன்
எம் குடும்பத்தின் குறை தீர்க்க பிறந்தாயே — கபிலன்
கனவுகள் பல கண்டு நிறைவேறாமல்
குறைந்து போய்விட்டாயே குடும்ப எண்ணிக்கையில்
"இது காலம் செய்த பாவமா
இல்லை காலன் கொண்ட பாசமா,
இல்லை கடவுள் செய்த மோசமா"

மறுபிறவி ஒன்று உண்டெனில் மீண்டும்
வந்து சேர்ந்து விடு தம்பி
ஒவ்வொரு ஆண்டும் உன் பிறந்த
தினம் வரும் பொழுது எல்லாம்
நீ வரமாட்டாயா என்று ஏங்குகிறோம்

கண்ணீர் சிந்துகின்றோம் — தம்பி
உன் நினைவுகள் எம்முள் நீந்துவதால்
என்ன பாவம் செய்தோம் — தம்பி கபிலன்
எமக்கு உன் இழப்பை ஏன் தந்தாய்
தாய், தந்தைப் பறவைக்கு குஞ்சுகளாய் — இருந்தோம்

எம்மை விட்டு எதற்காக — விரைவாக
பறந்து சென்றாய் — தம்பி
நீ வருவாய் என்று எண்ணியே காலம் ஓடுது
உன் வருகைக்காய் நாமும் வாழுகின்றோம்
கண்ணீரோடு முடிக்கின்றேன் இக் கவிதாஞ்சலியை

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

உன் பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்

(C-0392)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் ... இல் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org